## துறையூர் நகராட்சி

2021 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 11.02.2021 வியாழன் கிழமை ( தமிழ் சார்வரி வருடம் தை மாதம் நாள்.28) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 11.02.2021 | 01 | அரசு முதன்மை செயலர், பொது (தேர்தல்-1) துறை சென்னை அவர்களின் கடித எண்.11/Ele-1/2020-1 நாள்.07.01.2021-ன் கடிதத்தில், தேர்தல்-2021 சட்டமன்ற தேர்தல் பணிக்கு வாக்களிக்க வரும் மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் அமைத்து தேர்தல் பணியினை சிறப்பாக நடத்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br>மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் RC.No.42/23000/2020 நாள்.03.02.2021 நாளிட்ட கடிதத்தில், தேர்தல்-2021 சட்டமன்ற தேர்தல் பணிக்கு துறையூர் நகராட்சிக்கு 30 எண்ணிக்கையில் சக்கர நாற்காலிகள் வாங்க தெரிவிக்கப்பட்டும் அதனை வாங்கும் நிறுவனம் தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண்: 635 அனுமதிக்கப்பட்டது |

| Sl.No | Product Code | Noman | Unit | Quality | Rate | Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | TD2C51 | Wheel Chair folding adult | | 30 | 7047.62 | 2,11,428.60 |
| | | | | IGST | 5% | 10,571.43 |
| | | | Total | | | 2,22,000.03 |

மேற்கண்ட தொகை ரூ. 2,22,000/- ஐ (ALIMCO) Artificial Limbs Manufactoring C நிறுவனத்திற்கு வழங்க மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகறிது.(ந.க.எண்.2363/2020/இ2)

**அலுவலக குறிப்பு:**

தேர்தல் பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி சக்கர நாற்காலிகளுக்கான பட்டியல் தொகை ரூ.2,22,000/- வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 11.02.2021 | 02 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் மற்றும் கடைகளுக்கான குத்தகை உரிமம் 2021-2022 –ம் ஆண்டு ஒப்படைக்கு நாள் முதல் 2023-2024-ம் ஆண்டு முடிய ஏல வைப்புத்தொகை , பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் நகர்மன்ற தீர்மானம் எண்:578 நாள். 31.12.2020-ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. | தீர்மான எண்:636 அனுமதிக்கப்பட்டது |

தற்போது நிர்வாக நலன் கருதி , பின் வரும் காலங்களில் யாதொரு பிரச்சனைகள் எழாவண்ணம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்திட ஏதுவாக மேற்படி நகர்மன்ற தீர்மானத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகளை மட்டும் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்வதற்கும் பொது நிபந்தனைகளில் நிபந்தனை எண்.4,5,6,மற்றும் 11 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள சொத்து வருமானம் (சால்வன்சி) குறித்த சரத்துகள் மற்றும் இதர நிபந்தனைகளில் ஏதேனும் சால்வன்சி என குறிப்பிட்டு இருந்தால் அதன் சரத்துக்கள் ரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2021-2022ம் ஆண்டு ஒப்படைக்கும் நாள் முதல் 2023-2024ம் ஆண்டு முடிய
நகராட்சியின் மூன்றாண்டு குத்தகை உரிமம்
வைப்புதொகை விபரம்

| வ, எண். | குத்தகை இனங்களின் விபரம் | ஏல வைப்புத்தகை தொகை(ரூபாய்) |
|---|---|---|
| 1 | துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | ரூ. 13,00,000/- |
| 2 | நகராட்சி ஆடுவதை செய்யும்இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம்( | ரூ.50,000/- |
| 3 | துறையூர்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாபேருந்து நிலையத்தில் உள்ள ஒரு நவீனகட்டணம் கழிப்பிடம் உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமம் | ரூ10,00,000/- |
| 4 | துறையூர்நகராட்சிக்கு சொந்தமான தினசரிகாய்கனி மார்கெட்டில் கட்டியுள்ள 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கு செல்லும் நடைபாதை நீங்கலாக பின்பக்கம் (கீழக்கே) உள்ள் காலியிடத்தில் தரையில் வைத்து செல்லும் விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் (ஒப்படைக்கும் மாதம் முதல்) | ரூ15,00,000/- |

| | | |
|---|---|---|
| 5 | துறையூர், நகராட்சிக்கு சொந்தமான சுவாமி நாதன் தினசரி மார்க்கெட் கடைகள் எண்கள், 15, 16, 17, 34, 42, 43, 44 மற்றும் 45க்கான மாத வாடகைக்கு கடை அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமம். (ஒவ்வொரு கடைக்கும் ஏலத்தில் கலந்துகொள்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான தொகையினை தனித்-தனியாக செலுத்தி விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) (ஒப்படைக்கும் மாதம் முதல்) | ரூ. 50,000/. |
| 6 | துறையூர், நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை கடைகள் எண்கள்.2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16 மற்றும் 17க்கான மாத வாடகைக்கு கடை அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமம். (ஒவ்வொரு கடைக்கும் ஏலத்தில் கலந்துகொள்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான தொகையினை தனித்தனியாக செலுத்தி விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) (ஒப்படைக்கும் மாதம் முதல்) | ரூ. 30,000/- |
| 7 | துறையூர்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்துநிலையம் மற்றும் பழைய நகராட்சி வளாகம் புதிய கடை எண்கள்.2,4,5,9,10,18 மற்றும் 23 க்கான மாத வாடகைக்கு கடை அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமம். (ஒவ்வொரு கடைக்கும் ஏலத்தில் கலந்துகொள்பவர் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கான தொகையினை தனித்தனியாக செலுத்தி விண்ணப்பிக்கப்பட வேண்டும்.) (ஒப்படைக்கும் மாதம் முதல்) | ரூ. 2,00,000/- |

(ந.க. எண்.4077/2020/அ1)

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

| | | | |
|---|---|---|---|
| 11.02.2021 | **03** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19775/ஜெ2/2019-3 நாள்.15.12.2020-ன் படி இந்நகராட்சி பகுதியில் உள்ள முடிதிருத்தம் நிலையம், அலகு நிலையம், ஸ்பா மற்றும் மசாஜ் நிலையம் | தீர்மான எண்:637 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>நடத்துவர்களின் தொழில்களுக்கு உரிமம் பெற அறிவிப்பு விபரத்தினை கீழ்க்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>விளம்பரம் செய்யப்பட்ட பதிப்பு</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினமணி திருச்சி பதிப்பு</td><td>31.12.2020</td><td>ரூ.3486/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Adwave advertising private limited Chennai. நிறுவனம் ரூ.3486/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது ஆணையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.3885/2020/எச்1)<br>
அலுவலக குறிப்பு:<br>
அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>11.02.2021</td>
<td>04</td>
<td>துறையூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாடு திட்டம் (IUDM) 2020-21 நிதியின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மற்றும் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில்20.09.2020 அன்று விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.86625/- மட்டும் வழங்க கோரி Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே தொகை ரூ.86625/- மட்டும் Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண். 1833/2020/இ1)<br>
அலுவலக குறிப்பு : மேற்படி செலவினம் இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:638<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>11.02.2021</td>
<td>05</td>
<td>2021-2022-ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் செயல்பட்டுவரும் அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி, சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் விற்பனைக்குரிய டோக்கன்கள் அச்சிட்டு பெறவும் மற்றும் பதிவேடுகள் வாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. மேற்காணும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் மற்றும் பதிவேடுகள் தமிழ்நாடு மல்டி பர்ப்பஸ் இண்ட்கோ சர்வ் திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்திட அனுமதிக்கும் மற்றும் இதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.917/20220/எச்1)<br>
அலுவலக குறிப்பு :<br>
அ. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ஆ.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:639<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

11.02.2021

**06**

துறையூர் நகராட்சியில் பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிக்கு கீழ்காணும் பொது சுகாதார கனரக வாகனம் வாங்கப்பட்டது. இவ்வாகனங்கள் கொள்முதல் செய்து 20 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வந்தது, தற்போது கீழ்காணும் வாகனங்கள் பயன்படுத்தாத நிலையில் உள்ளது.

| வ. எண் | பதிவு எண் | தயாரிப்பு நிறுவனம் | வாகனத்தின் வகைப்பாடு | கொள்முதல் ஆண்டு | காரணம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | TN45V7329 | அசோக் லைலேண்ட் | கனரக வாகனம் | 09.10.1998 | முதிர்வு | இயக்க முடியாத நிலை |
| 2 | TN45V5119 | மகிந்திரா & மகிந்திரா | இலகுரக வாகனம் (ஈப்பு) | 19.06.1998 | முதிர்வு | இயக்க முடியாத நிலை |
| 3 | TN45U5366 | அசோக் லைலேண்ட் | கனரக வாகனம் | 14.10.1999 | முதிர்வு | இயக்க முடியாத நிலை |
| 4 | TNX6619 | அசோக் லைலேண்ட் | கனரக வாகனம் | 22.09.1988 | முதிர்வு | இயக்க முடியாத நிலை |

மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பார்ப்பதில் பெரும் செலவினம் ஏற்படுவதினாலும் தற்போது முழுவதுமாக பயன்பாடற்ற நிலையிலும் உள்ளது.

மேற்படி வாகனங்கள் சுமார் 20 ஆண்டுகளாக பயன்பாட்டில் வந்துள்ள நிலையில் தற்போது கடந்த 4 வருடங்களாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்கண்ட வாகனங்கள் முறையே 32858, 78109 கி.மீட்டர் தூரம் கடந்துள்ள நிலையில் அரசாணை எண்.2275, நாள்.10.10.1990-ல் குறிப்பிட்டுள்ள கால தூர அளவுகளை கடந்து தற்போது பெரும் பழுதுகள் காரணாக வாகனங்களை பயன்படுத்த முடியாத சூழல் உள்ளது. அரசாணை எண்.2275, நாள்.10.10.1990-ல் குறிப்பிட்டுள்ள விதி எண்.8(A)-ல் 10 ஆண்டுகள் மற்றும் 2,50,000 ஓடிய வாகனங்கள் பெரும் பழுதுகள் மற்றும் அதிக விலை மிதிப்புள்ள உதிரிபாகங்கள், டயர்கள் மற்றும் பேட்டரிகள் ஆகியவை புதிதாக மாற்றுவதற்கு பதிலாக அவ்வாகனத்தை கழிவு செய்து பொது ஏலம் வைக்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.917/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்:640
அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 11.02.2021 | **07** | இந்நகராட்சியின் 2020-21ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் எழுது பொருட்கள் மற்றும் டோனர் மென்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு கூடுதல் செலவினமாக உத்தேச செலவினம் ரூ.2,50,000/- (இரண்டு இலட்சத்து ஐம்பாதயிரம்) நகர்மன்றப்பொருள் வைக்கப்பட்டது. இந்நகர் மன்ற தீர்மான எண்.577 நாள்.31.12.2020 மன்றம் அனுமதித்த தொகையில் அரசாணை எண்.249 நாள்.21.05.2020 Finance (Budget General - 1)துறையின்படி 25% Reduction போக ரூ.1,96,818/- செலவினம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் படி செலவிடப்பட்டது ரூ.1,01,084/- போக மீதம் தொகை ரூ.95,734/- மட்டுமே இருப்பு உள்ளது தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் Ind No.13 Try திருச்சிராப்பள்ளியில் வாங்கி கொள்ள மேற்படி ஸ்டேசனரி பொருட்கள் இந்நகராட்சியில் அவ்வப்போது அறிக்கை பிரிண்ட் எடுப்பதற்கு அலுவலகபணிக்கு உபயோகப்படுத்தப்பட்டது. இருப்பு குறைந்து விட்டது மேலும் 31.03.2020 வரை அன்றாடப் பணிக்கு ஸ்டேசனரி பொருட்கள் தேவைப்படுவதால் மேலும் கூடுதல் செலவினமாக உத்தேச செலவினம் ரூ.2,00,000/- (இரண்டு இலட்சம்)மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:641<br>அனுமதிக்கப்பட்டது |
| 11.02.2021 | **08** | துறையூர் நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரி மார்கெட் 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கு செல்லும் நடைபாதை நீங்கலாக பின் பக்கம் கிழக்கே உள்ள காலி இடத்தில் தரையில் வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் மற்றும் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் வசூல் செய்து கொள்ளும் உரிமம் 31.03.2021-ல் முடிவடைதால் 2021-2022-ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 03.03.2021-தேதி ஏலம் கோரப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021-ல் நடைபெற அறிவிப்பு 26.02.2021-ம் தேதியில் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல் படுத்தப்பட்டது. எனவே பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த இயலாத காரணத்தால் துறையூர் நகராட்சி மூலம் துறை வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. **1.** சுவாமிநாதன் தினசரி மார்கெட் தரைகடை வசூல் செய்திட ரசீது புத்தகம் வரிசை எண் 1 முதல் 25000 வரை அச்சிட்டு பெற்றுக்கொள்ளவும் மற்றும் **2.** அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் வசூல் செய்து கொள்ளும் உரிமம் வசூல் செய்திட ரசீது புத்தகம் வரிசை எண் 1 முதல் 25000 வரை அச்சிட்டு பெறவும் மன்றம் அனுமதி பெறவும் மேற்படி ரசீது புத்தகங்கள் அச்சிட்டு தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்சர்வ் தொழில் | தீர்மான எண்:642<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கூட்டுறவு லிட் திருச்சிராப்பள்ளியில் பெறுவதற்கு அனுமதிக்கும் மற்றும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.100000/- செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 11.02.2021 | **09** | நகர் ஊரமைப்பு இயக்குனர் ((மு.கூ.பொ) சென்னை அவர்களது ந.க.எண்.11158/2020/TCP-2 நாள்.23.09.2020 கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூர் வட்டம், துறையூர் நகராட்சி, வார்டு எண்.A, பிளாக் எண்.03, நகரளவு எண்.12/1 (சர்வே எண்.75/2A பகுதி மற்றும் 75/6)ல் 4.44 ஏக்கர் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலைகள் மற்றும் ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்து விபரம் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>மேற்காணும் விவரப்படி வரைபடத்தில் கண்டுள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் பொது இடம் (0.5% மனை ஒதுக்கீடு) திருமதி.கி.ராஜலெட்சுமி தேவி மற்றும் மூவர் பவர் ஏஜென்ட் திரு.R.லலிதா என்பவர் நகராட்சி ஆணையருக்கு 05.02.2021ம் தேதி தானபத்திரம் பதிவு எண்.790ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டது.<br>மேலும் வரைபடத்தில் கண்டுள்ள வடிகால், தெருவிளக்கு மற்றும் சாலைகள் உதவிப்பொறியாளர் துறையூர் நகராட்சி அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் தார்சாலை அமைக்கப்பட்டதன் நிழற்படம் ஒப்படைப்பு செய்துள்ளார். தெருவிளக்கு அமைக்கப்பட்டதற்கு உதவி செயற்பொறியாளர் இயக்கலும் காத்தலும் வடக்கு துறையூர் அவர்கள் 08.02.2021ல் சான்று வழங்கியுள்ளார்கள். மேலும் மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.<br>மேற்காணும் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2094/2020/எப்1)<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | தீர்மான எண்:643<br>அனுமதிக்கப்பட்டது |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

//உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி

## துறையூர் நகராட்சி

2021 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 12 வெள்ளி கிழமை ( தமிழ் சார்வரி வருடம் தை மாதம் நாள்.29) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 12.02.2021 | 01 | துறையூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP 2020-21) திட்டத்தின் கீழ் ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அலுவலகத்தின் 12.02.2021ஆம் தேதிய தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | தீர்மான எண்:644 அனுமதிக்கப்பட்டது |

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| துறையூர் நகராட்சி | 6.00 | 5.40 | 0.60 |

மேற்படி வரப்பெற்ற தொலைபேசி செய்தி விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மற்றும் கீழ்காணும் பணிகளை நான்கு சிப்பங்களாக மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.இலட்சம்) |
|---|---|---|---|
| | **சிப்பம் - I** | | |

| | | | |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.24 எக்ஸ்டென்சன் (KVB பின்புறம்) பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 0.500 | 27.00 |
| 2 | வார்டு எண்.9 பெரியார் நகர் பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 0.270 | 15.00 |
| 3 | வார்டு எண்.19 அம்மாபட்டி சாலை பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 0.600 | 32.00 |
| 4 | வார்டு எண்.9 அமுதசுரபி நகர் பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 0.350 | 20.00 |
| 5 | வார்டு எண்.9, 18 சாமிநாதன் நகர் மற்றும் சொரத்தூர் ரோடு பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 0.700 | 35.00 |
| 6 | வார்டு எண்.24 செல்வம் நகர் மற்றும் அஷ்டலெட்சுமி நகர் பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 1.000 | 54.00 |
| | **மொத்தம்** | | **183.00** |
| | **சிப்பம் - II** | | |
| 7 | வார்டு எண்.10,11,12 மற்றும் 13 உயர்நிலைப்பள்ளி சாலை மற்றும் மருத்துவமனை சாலை பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 0.850 | 58.00 |
| 8 | வார்டு எண்.2 பெருமாள் கோவில் பிரதான தார்சாலை புதுப்பித்தல் பணி | 0.500 | 33.00 |
| 9 | வார்டு எண்.1 ஆத்தூர் ரோடு இடுகாடு சாலை பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | 0.140 | 20.00 |
| | **மொத்தம்** | | **111.00** |
| | **சிப்பம் - III** | | |
| 10 | வார்டு எண்.24 குடில் ரோடு மற்றும் எக்ஸ்டென்சன் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி | 1.350 | 183.00 |
| | **மொத்தம்** | | **183.00** |
| | **சிப்பம் - IV** | | |
| 11 | வார்டு எண்.19 அம்மாபட்டி சாலை (பிரதான சாலை), நெசவாளர் காலனி, மலையப்பன் சாலை ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 1.000 | 64.00 |

| | | | |
|---|---|---|---|
| 12 | வார்டு எண்.23 கூட்டுறவு நகர் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 0.400 | 26.00 |
| 13 | வார்டு எண்.23 ஆஞ்சநேயர் நகர் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 0.500 | 33.00 |
| | **மொத்தம்** | | **123.00** |
| | **மொத்த கூடுதல்** | | **600.00** |

ந.க.எண்.185/2021/இ1

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி நிதி ஒதுக்கீட்டின் படி நிர்வாக பங்குத்தொகை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி

# துறையூர் நகராட்சி

2021 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 26 வெள்ளி கிழமை ( தமிழ் சார்வரி வருடம் மாசி மாதம் நாள்.13) நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 26.02.2021 | 01 | ஆணையர் அவர்களது பிப்ரவரி மாதம் 2021 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : பதிவு செய்யலாம். | தீர்மான எண்:645<br>பதிவு செய்யப்பட்டது |
| 26.02.2021 | 02 | துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-21) நிதியின் கீழ் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலைகள் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.644 நாள்.12.02.2021-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. | தீர்மான எண்:646<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | சிப் பம் | பணியின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி மதிப்புத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | வார்டு எண்.24 எக்ஸ்டென்சன் (KVB பின்புறம்) பகுதி, வார்டு எண்.9 பெரியார் நகர் , | ரூ.18315727/- | திரு.P.ஜெய் சங்கர், ஒப்பந்ததாரர், | மதிப்பீட்டை விட 4.95% அதிகம் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வார்டு எண்.19 அம்மாபட்டி சாலை , வார்டு எண்.9 அமுதசுரபி நகர் , வார்டு எண்.9, 18 சாமிநாதன் நகர் மற்றும் சொரத்தூர் ரோடு பகுதியில் , வார்டு எண்.24 செல்வம் நகர் மற்றும் அஷ்டலெட்சுமி நகர் ஆகிய பகுதிகளில் புதிய தார்சாலை அமைத்தல், | | துறையூர் | | | |
| | | | | | | | திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர் | மதிப்பீட்டை விட 8.38% அதிகம் | | |
| | | | 2 | 2 | வார்டு எண்.10,11,12 மற்றும் 13 உயர்நிலைப்பள்ளி சாலை மற்றும் மருத்துவமனை சாலை பகுதி வார்டு எண்.2 பெருமாள் கோவில் பிரதான தார்சாலை புதுப்பித்தல் பணி மற்றும் வார்டு எண்.1 ஆத்தூர் ரோடு இடுகாடு சாலை பகுதியில் புதிய தார்சாலை அமைத்தல் | ரூ.11004033/- | திரு.K. ராஜேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் | மதிப்பீட்டை விட 4.95% அதிகம் | | |
| | | | | | | | திரு.K.சுரேஷ், ஒப்பந்ததாரர், துறையூர் | மதிப்பீட்டை விட 9.12% அதிகம் | | |
| | | | 3 | 3 | வார்டு எண்.24 குடில் ரோடு மற்றும் எக்ஸ்டென்சன் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் மற்றும் மழைநீர் வடிகால் | ரூ.18297203/- | திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர் | மதிப்பீட்டை விட 4.94% அதிகம் | | |
| | | | | | | | திரு.T.இந்தி | மதிப்பீட்டை | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அமைத்தல் பணி | | ரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் | விட 12.46% அதிகம் |
| 4 | 4 | வார்டு எண்.19 அம்மாபட்டி சாலை (பிரதான சாலை), நெசவாளர் காலனி, மலையப்பன் சாலை ஆகிய பகுதிகள், வார்டு எண்.23 கூட்டுறவு நகர் வார்டு எண்.23 ஆஞ்சநேயர் நகர் பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் ஆகிய பணிகள். | ரூ.12207363/- | திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் | மதிப்பீட்டை விட 4.94% அதிகம் |
| | | | | திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர் | மதிப்பீட்டை விட 9.64% அதிகம் |

வரப்பெற்ற மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள 4 ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் மதிப்பீட்டினை விட 5% கூடுதல் என்ற அளவிற்கு மிகாமல் உள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமல்படுத்தப்படவுள்ளதாலும், வரும் நிதியாண்டில் ஏற்படக்கூடிய கூடுதல் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகளாக கோரப்பட்டதால் திட்டப்பணியினை விரைந்து முடித்திட வேண்டிய அவசரம் காரணமாகவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கிய ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதம் மதிப்பீட்டை விட 5% கூடுதலுக்கு உட்பட்டு மன்ற வரம்பிற்குள் இருப்பதாலும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.185/2021/இ1)

**அலுவலக குறிப்பு** :

| | | | |
|---|---|---|---|
| | | 1. ஒவ்வொரு சிப்பத்திற்கும் கீழ்காணுமாறு குறைந்தபட்ச விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள (L1) ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br><br>சிப்பம் - 1 திரு.P.ஜெய்சங்கர் - மதிப்பீட்டை விட 4.95% அதிகம்<br>சிப்பம் - 2 திரு.K. ராஜேஷ் - மதிப்பீட்டை விட 4.95% அதிகம்<br>சிப்பம் - 3 திரு.K.சரவணன் - மதிப்பீட்டை விட 4.94% அதிகம்<br>சிப்பம் - 4 திரு.T.இந்திரஜித் - மதிப்பீட்டை விட 4.94% அதிகம்<br><br>2. சாலைகள் திட்டப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டியுள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று LOA வழங்கியதையும் அனுமதிக்கலாம்.<br><br>3. மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 26.02.2021 | **03** | துறையூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.3457/2019/அ3 நாள்.28.01.2021ன் படி துறையூர் நகராட்சி, வார்டு எண்.6 சாமிநாதன் தெரு இணைப்பில் LED தெருவிளக்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 17.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. | தீர்மான எண்:647<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | M/S BALAJEE ELECTRICALS, TRICHY | மதிப்பீட்டை விட 0.13% குறைவு |
| 2 | M/S STAR ENGINEERING, TRICHY | மதிப்பீட்டை விட 0.73% அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள M/S BALAJEE ELECTRICALS, TRICHY அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.188/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 26.02.2021 | **04** | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.894/2020/அ1, நாள்.17.02.2021ம் தேதிய கடிதத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் அலுவலக ஈப்பு வாகன எண்.TN49CG0555-க்கு அக்டோபர்-2020 மாதத்திற்குரிய டீசல் கட்டணத் தொகை ரூ.8419/-ஐ துறையூர் நகராட்சி பொது நிதியிலிருந்து AUTOMOBILE ENGINEER, GOVT.AUTOMOBILE WORKSHOP, THANJAVUR என்ற நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏதுவாக காசோலையாக அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ரூ.8419/-ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் தஞ்சாவூர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.639/2021/எச்1)<br>அலுவலக குறிப்பு:<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்:648<br>அனுமதிக்கப்பட்டது |
| 26.02.2021 | **05** | துறையூர் நகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றிற்கு 2020-2021-ம் நிதி ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைக்கும் 2021-2022ம் நிதி ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதிக்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை (Budget) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்:649<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | (ந.க.எண்.418/2021/பி1)<br>**அலுவலக குறிப்பு** : அனுமதிக்கலாம். | |
| 26.02.2021 | **06** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க. எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோசிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.517 நாள். 30.09.2020 ல் 01.10.2020 முதல் 31.03.2021 முடிய 6 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை முன்னிட்டு இந்நகராட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளதாலும் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 அறிவிக்கப்பட்டவுள்ள தேர்தல் நடத்தை விதிமுறையை கடை பிடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாலும் மேலும், மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளது. பொது மக்கள், பொது சுகாதாரதை பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், மேற்படி பணிகளுக்கு 01.04.2021 முதல் 30.06.2021 வரை (ஆறு மாதங்கள்) காயா ஆண்கள் சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு 24 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4244.2018.எச்1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:650<br>அனுமதிக்கப்பட்டது |
| 26.02.2021 | **07** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜெ3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து | தீர்மான எண்:651<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>நகர் மன்ற தீர்மான எண்.516 நாள்.30.09.2020-ல் 01.10.2020 முதல் 31.03..2021 முடிய 6 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை முன்னிட்டு இந்நகராட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளதாலும் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 அறிவிக்கப்படவுள்ள தேர்தல் நடத்தை விதிமுறையை சடை பிடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாலும் மேலும் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளது. பொது மக்கள், பொது சுகாதாரம் பேணி காக்கும் பொருட்டும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் மேற்படி பணிகளுக்கு 01.04.2021 முதல் 30.06.2021 வரை (மூன்று மாதங்கள்) நிலா மகளிர் சுய உதவிக் குழுக்கள் 32 பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களது 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.9,00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மற்றும் இச்செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகறிது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>26.02.2021</td>
<td>08</td>
<td>துறையூர் நகராட்சியில் குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணம் 2020-21ம் ஆண்டுக்கு கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் வீட்டு உரிமையாளர்களிடம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விபரம்.
<table>
<tr><th>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம்</th><th>கருங்கல் ஜல்லி சாலை ரூ.<br>(Earthern Road)</th><th>தார்சாலை ரூ.<br>(BT Road)</th><th>சிமெண்ட் சாலை ரூ.<br>(CC Road)</th></tr>
<tr><td>0-30 மீட்டர் நீளத்திற்கு</td><td>2130</td><td>4490</td><td>5180</td></tr>
<tr><td>30-90 மீட்டர் நீளத்திற்கு</td><td>3290</td><td>5640</td><td>6320</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:652<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | 2021-22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் இணைப்பிற்கான சாலை சீரமைப்பு கட்டணத்தை தற்போதுள்ள கட்டணத்திலிருந்து 5% உயர்வு செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் வீட்டு உரிமையாளர்களிடம் வசூல் செய்திட கீழ்காணும் விபரப்படி சாலை சீரமைப்பு கட்டணம் நிர்ணயம் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>ந.க.எண்.1156/2018/இ2<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| 26.02.2021 | **09** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலம் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.27-அ3-2017 நாள். .06.2017ன் கடிதத்தில் டெங்கு சிக்கன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (Domestic breeding checker) களப்பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.518 நாள். 30.09.2020 ல் 01.10.2020 முதல் 31.03.2021 முடிய 6 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை இந்நகராட்சியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நடைமுறையில் உள்ளதாலும் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 அறிவிக்கப்படவுள்ள தேர்தல் நடத்தை விதிமுறையை கடை பிடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதாலும் மேலும், மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத | தீர்மான எண்:653<br>அனுமதிக்கப்பட்டது |

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் ஜல்லி சாலைக்கு (Earthern Road) ரூ. | தார்சாலைக்கு (BT Road) ரூ. | சிமெண்ட் சாலைக்கு (CC Road) ரூ. |
|---|---|---|---|
| 0-30 மீட்டர் நீளத்திற்கு | 2240 | 4720 | 5440 |
| 30-90 மீட்டர் நீளத்திற்கு | 3460 | 5925 | 6640 |

| | | | |
|---|---|---|---|
| | | சூழ்நிலை உள்ளதாலும் இந்நகராட்சி 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு வீடுகளாக சென்று source reduction பணி மேற்கொள்ளவும் மற்றும் கொசு புழு ஆதாரங்களை அதன் ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து அபேட் மருந்திட்டு அழிக்கவும் முதிர் கொசுக்களை கொசு புகைமருந்து அடிப்பான் இயந்திரங்கள் கொண்டு அழித்திடவும் மற்றும் தெருக்களில் பயனற்ற வகையில் உள்ள டயர்கள், உடைந்த மற்றும் தேவையற்ற பிளாஸ்டிக் தென்னைமட்டை, கொட்டாங்குச்சி, கண்ணாடி பொருட்கள், ஆட்டு உரலில் தேங்கியுள்ள நாள்பட்ட தண்ணீரை நீக்குதல் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதி செய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று நோய் பராவமல் இருக்க உரிய நடவடிக்கைகளுக்கு 30 களப்பணியாளர்களை 01.04.2021 முதல் 30.06.2021 முடிய நியமித்து கொள்ளவும் மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களது விலைவிகிதத்தில் செலவினம் செய்துகாள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சதிற்கு மன்றம் அனுமதி வழங்க பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2177/13/எச்1)<br>**அலுவலக குறிப்பு:** இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு 01.04.2021 முதல் 30.06.2021 முடிய 3 மாதங்களுக்கு உள்ளூரில் இயங்கி வரும் தாழைமலர் மகளிர் சுய உதவிக்குழுக்களை கொண்டு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் வருவாய் நிதியில் செய்துக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | |
| 26.02.2021 | **10** | துறையூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் 2019-20ம் கல்வியாண்டின் தொடக்கத்தில் 25 மாணவர்களே இருந்தனர் என்றும் தற்போது 2020-2021ம் கல்வியாண்டில் 105 மாணவர்கள் சேர்க்கப்பட்டு உள்ளனர் என்றும், பள்ளிக் கட்டிடங்கள், வகுப்பறைகள் சிதலமடைந்து உள்ளதை சரிசெய்து தர கோரியும், வகுப்பறையின் முன்பகுதி உடைந்ததை சரிசெய்து தருமாறும் மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள், ஆசிரியர்கள் படியில் ஏற சாய்வு தூண்கள் அமைத்து தரும்படியும் மற்றும் தேவையான எலக்ட்ரிக்கல் பணி செய்து | தீர்மான எண்:654<br>அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தருமாறும் நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் கேட்டுக்கொண்டதை தொடர்ந்து பள்ளிக்கட்டிடங்களில் நேராய்வு செய்ததில் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அ.கு: மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 26.02.2021 | **11** | 2020-21ம் ஆண்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களது சுற்றிக்கை ந.க.எண்.5437/ஜெ1/2020 நாள் 09.03.2020-ல் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் கொடிய தொற்று நோய் பரவாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. இதற்கிணங்க முக்க் கவசம், லைசால், சோடியம் ஹைட்ரோகுளோரைட் கரைசல், பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு நீர், கையுறை, தற்காப்பு உடைகள் போன்ற கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்தப்பட்டது. மேலும் கோவிட் 19 ஊரடங்கு காலங்களில் அம்மா உணவகங்களில் உணவுகள் தயாரிக்கப்பட்டு பேருந்து நிலையம், பெருமாள் மரல அடிவாரம், மற்றும் சில இடங்களில் தங்கியுள்ள ஆதரவற்ற ஏழை எளிய மக்களுக்கு சூடான தரமான உணவு வழங்கப்பட்டு வந்தது. 2020-21ம் ஆண்டு இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு ரூ.25.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.<br>இதே போல் 2021-22ம் ஆண்டு துறையூர் நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தடுப்பு நடவடிக்கை தொடர்பாக இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் தொற்று தினசரி அதிகரித்தும் பன்மடங்காக நோய் தொற்று அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டும், தமிழ்நாட்டிலும் தினசரி நோய் பரவி வரும் சூழலைக் கருத்தில் கொண்டும், இந்நோய் நகராட்ச பிகுதிகளில் நோய் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், தினசரி பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட், அனைத்து அரசு மற்றும் நகராட்சி பள்ளிகள், பொது இடங்கள், பாதிக்கப்பட்ட தெருக்களில் கிருமி நாசினி தெளித்திடவும், பணியாளர்களுக்கு தினசரி பயன்படுத்த முகக்கவசம், கையுற மற்றும் கொரோனா கவச உடைகள் வாங்கிடவும் அவசர அவசியத்தினை கருதியும், பொது சுகாதாரம் பொதுமக்கள் நலன் கருதியும், கீழ்க்கண்ட கொரோனா தடுப்பு மருந்துகள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது.<br>1. முகக்கவசம், 2. லைசால், 3. சோடியம் ஹைட்ரோ குளோரைட் | தீர்மான எண்:655<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>கரைசல், 4. பிளிச்சிங் பவுடர், 5. நீர்த்த சுண்ணாம்பு நீர், 6. கையுறை, 7.தற்காப்பு உடைகள் மற்றும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மேற்காணும் கிருமிநாசினி பொருட்கள் வாங்கிக்கொள்ளவும், இதனைக் தவிர நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழங்கும் அறிவுரைக்கிணங்க பொது சுகாதார பொருட்கள் வாங்கிக்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.30.00/-ல் (ரூபாய் முப்பது இலட்சம்) செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.810/2020/எச்1)<br>அலுவலக குறிப்பு:<br>2021-2022ம் ஆண்டிற்கு கொரோனா வைரஸ் தொற்றுநோய் நகராட்சி பகுதியில் பரவாமல் இருக்கும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியம் கருதி ரூ.30.00 இலட்சம் (ரூபாய் முப்பது இலட்சம்) செலவினம் செய்து கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td>26.02.2021</td><td>12</td><td>துறையூர் நகராட்சியில் காவேரி குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பழைய அலுவலக வளாகம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத்தொட்டிக்கு நீரளிப்பு வழங்கப்பட்டு வருவதில், தரைமட்டத்தொட்டியில் கேஸ் குளோரினேசன் மூலம் குளோரின் ஏற்றம் செய்வதற்கு Out Sourcing அடிப்படையில் பணியாளர்கள் 01.03.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு 2 எண்ணிக்கை அமர்த்திக்கொள்ள ரூ.3.25 இலட்சத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி நாள்.01.02.2021ன் பிரகாரம் அனுமதி பெறப்பட்டு 26.02.2021 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.V.பாஸ்கர்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீடு விகிதம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 2% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.V.பாஸ்கர், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்தில் உள்ளது. குறைவான ஒப்பந்தப்புள்ளி என்பதால் இதனை</td><td>தீர்மான எண்:656<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>1. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். | |
| 26.02.2021 | **13** | நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4840/2018/எச்1 நாள்.21.02.2019 உத்திரவில் 6 LCV வாகனங்கள் 1 காம்பாக்டர் வாகனத்திற்கு Our Sourcing முறையில் 7 ஓட்டுனர்களை இரண்டு வருடங்களுக்கு H.M.S தனியார் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் நியமித்து பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. H.M.S நிறுவனம் ஏப்ரல் 2019 முதல் ஒட்டுனர் பணிக்கு அவுட்சோர்ஸ் முறையில் 7 ஓட்டுனர்களை வழங்கியுள்ளது. இவ்வுத்திரவின்படி 01.04.2019 முதல் 31.03.2021 முடிய H.M.S நிறுவனம் 7 ஓட்டுநர்களை இந்நகராட்சிக்கு சப்ளை செய்து வர மேற்காணும் செயல் முறை உத்திரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் தமிழ் நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021 அறிவிக்கப்படவுள்ள தேர்தல் நடத்தை விதி முறையை கடை பிடிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை முன்னிட்டு இந்நகராட்சி முன்னெச்சரிக்கை மேற்க்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளதால் மேலும் பொது மக்கள் பொது சுகாதாரத்தை பேணிக்காக்கும் பொருட்டும் நிர்வாக நலன் கருதியும் H.M.S நிறுவனத்தின் குறைந்த பட்ச ஒப்பந்தபுள்ளி ரூ.473.25/- தலா ஒருவருக்கு வீதம் 7 ஒட்டுனர்களுக்கு 01.04.2021 முதல் 30.06.2021 வரை பணி அமர்த்தி கொள்ளவும் இந்த ஒட்டுனர்களுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.3.10 இலட்சம் செலவினம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4840/2018/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:657<br>அனுமதிக்கப்பட்டது |
| 26.02.2021 | **14** | துறையூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.3457/2019/அ3 நாள்.28.01.2021ன் படி துறையூர் நகராட்சி அண்ணா பேருந்து நிலைய கீழ்புறம் | தீர்மான எண்:658<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>LED தெருவிளக்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 17.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>M/S BALAJEE ELECTRICALS, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S STAR ENGINEERING, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.73% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள M/S BALAJEE ELECTRICALS, TRICHY அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.188/2021/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>26.02.2021</td>
<td>15</td>
<td>துறையூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-21ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.3551/2020/அ3-2 நாள்.28.01.2021ன் படி துறையூர் நகராட்சி, ஆத்தூர் ரோடு முதல் கோவிந்தாபுரம் சந்திப்பு வரை LED தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 17.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>M/S STAR ENGINEERING,</td><td>மதிப்பீட்டை விட 0.19% குறைவு</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்:659<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>TRICHY</td><td></td></tr>
<tr><td>2</td><td>M/S BALAJEE ELECTRICALS, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.42% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள M/S STAR ENGINEERING, TRICHY அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.19% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.189/2021/இ1)
அலுவலக குறிப்பு :
<ol>
<li>மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>26.02.2021</td>
<td>16</td>
<td>
துறையூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020-21ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.3551/2020/அ3-1 நாள்.04.02.2021ன் படி துறையூர் நகராட்சி, வார்டு எண்.11 தியாகி குமரன் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T. இந்திரஜித்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.17% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K. சரவணன்,<br>ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.19% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T. இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.17% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.
</td>
<td>தீர்மான எண்:660<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>(ந.க.எண்.190/2021/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>26.02.2021</td><td>17</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டுக்கான உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் படி 04.10.2018-ம் தேதிய தீர்மானம் எண்.468 மற்றும் 469-ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதன் படியும் மற்றும் நகர்மன்ற தீர்மானஎண்.310 நாள்.07.01.2020-ன் படியும் தனி அலுவலர் முன் அனுமதி நாள்12.03.2020-ன் படியும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், அண்ணா பேருந்து நிரலயத்தில் உள்ள கட்டணகழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் தரைகடை குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரி மார்கெட் கடைகள் 15,16,17,34,42,43.44. மற்றும் 45 க்கான குத்தகை உரிமம் , வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5, 9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2020-2021, முதல் 2022-2023 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 11.02.2020-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்டநாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>தினதந்தி, திருச்சி பதிப்பு</td><td>26.01.2021</td><td>ரூ.8064/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு Adwave Advertising Private Ltd., Chennai, நிறுவனம் ரூ.8064/- வழங்க கேட்டுக்கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி</td><td>தீர்மான எண்:661<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>வேண்டப்படுகிறது. ந.க.எண்.4077/2020/அ1<br>அலுவலககுறிப்பு: அ) அனுமதிக்கலாம்<br>ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்.</td><td></td></tr>
<tr><td>26.02.2021</td><td>18</td><td>ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்திவர்களின் ஈமச்சடங்கிற்கு தொகையை ரூ.2500/- லிருந்து ரூ.5000/- ஆக உயர்த்தியுள்ள அரசாணை (நிலை) எண்.105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (தொடு.தடு-2) துறை நாள்.19.10.2020 அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் செல்பாட்டிற்கும் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1323/2020/அ1<br>அலுவலககுறிப்பு: மன்றம் பார்வையிட்டும் செய்பாட்டிற்கும் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:662<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>26.02.2021</td><td>19</td><td>துறையூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-20ன் கீழ் பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.3457/2019/அ3 நாள்.28.01.2021ன் படி துறையூர் நகராட்சி, வார்டு எண்.10 உயர்நிலைப்பள்ளி சாலையில் LED தெருவிளக்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 17.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>M/S BALAJEE ELECTRICALS, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.13% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S STAR ENGINEERING, TRICHY</td><td>மதிப்பீட்டை விட 0.73% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள M/S BALAJEE ELECTRICALS, TRICHY அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.13% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்:663<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | (ந.க.எண்.188/2021/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-.அ.வீரமுத்துக்குமார்
தனி அலுவலர்

/ /உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி